museum of modern
and contemporary art
sri lanka

## Quarterly Newsletter #11 – June 2025

அருங்காட்சியகத்தின் வளர்ச்சியில் அடுத்த கட்டத்தை அடையும் நோக்கில், நவீன மற்றும் சமகாலக்கலைக்கான இலங்கை அருங்காட்சியகமானது (MMCA இலங்கை), அதன் தற்காலிக வளாகமான க்ரெஸ்கட் புலவார்ட் கொழும்பு 3 இலிருந்து இடம் மாறப் போகிறது என மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம்!

பல வகையான உள்ளூர் மற்றும் சர்வதேச நிகழ்வுகளுள் எமது இலவச கண்காட்சிகள் மற்றும் கற்றல் நிகழ்வுகளும் தொடரும். நவீன மற்றும் சமகால கலைக்கான இலங்கையின் முதலாவது நிரந்தர அருங்காட்சியகத்தைத் திறப்பதற்கும், இயக்குவதற்கும் அதற்கான பணியாளர்களை நியமிப்பதற்கும் தேவையான திட்டமிடல், பயிற்சி மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை இந்தப் புதிய கட்டம் துரிதப்படுத்தும். கலை சமூகம் மற்றும் பாடசாலைகளுடன் MMCA இலங்கைக்குள்ள ஈடுபாட்டை எதிர்வரும் காலங்களில் அதிகரிக்க ஆர்வமாக உள்ளோம். அருங்காட்சியகங்கள் இன்றைய உலகில் வகிக்கும் பங்கினைக் குறித்து இதன் மூலம் இன்னும் அதிகமானோர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மார்ச் 10ம் 11ம் திகதிகளில், இலங்கையின் அருங்காட்சியகத் துறையில் தொழில் திறனை வளர்ப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு பயிற்சித் திட்டமான எங்கள் 'தீவிர அருங்காட்சியக பயிற்சியின்களின்' (MI 3) மூன்றாவது பதிப்பினை நாங்கள் நடத்தினோம். MI 3 ஆனது ஒருங்கிணைந்த தீங்குயிர் மேலாண்மை (IPM) மற்றும் ஆவணக் காப்பகப் பொருட்களை சுத்தம் செய்தலிலும் களஞ்சியப்படுத்தலிலும் கவனம் செலுத்தியது.

உலக நினைவுச்சின்னங்கள் நிதியத்துடனான நெருங்கிய கூட்டுமுயற்சியுடன் உருவாக்கப்பட்ட இந்த இரண்டு நாள் நிகழ்ச்சித்திட்டமானது, City & Guilds of London Art School, ஐக்கிய இராச்சியத்தில் ஆசிரியராய் பணியாற்றுபவரும், UK, தேசிய அறக்கட்டளையில் காகிதம் மற்றும் புகைப்படவியலில் முதுநிலை சுவடிக் காப்பாளருமான சுயாதீன காகிதக் காப்பு ஆலோசகர் நிக்கோலா வோக்கர் இனால் வழிநடாத்தப்பட்டது.

MMCA இலங்கையின் குழுவின் உறுப்பினர்களைத் தவிர, இந்தப் பட்டறையில் தேசிய கலைக்கூடம், வரலாற்று உரையாடல் மற்றும் நினைவகத்திற்கான கூட்டு, லயனல் வெண்ட் கலை மையம், கியூராடோ கலை வெளி, Foto Design, சமகால கலை, கட்டிடக்கலை மற்றும் வடிவமைப்புகளுக்கான இலங்கை காப்பகம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

ஆகியவற்றின் ஊழியர்களும், இலங்கையை தளமாகக் கொண்ட சுயாதீன காப்பாளர்களும் பங்கேற்றனர்.

இருஷி தென்னகோன், சுமேத கெலேகம, மற்றும் சுமுது அதுகோரள ஆகியோரின் 'is this an architectural documentary?' (2023) என்ற அசைவூட்டப்பட்ட ஆவணப்படமானது, கட்டிடக்கலை வரலாற்றாசிரியர்கள் சங்கத்தால் (SAH) திரைப்படம் மற்றும் காணொளிக்கான மதிப்புமிக்க 2025 SAH விருதைப் பெற்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். 19வது வெனிஸ் கட்டடக்கலை பியனாலே இல் கத்தார் தேசிய அரங்கின் ஒரு பாகமாக திரைப்படத்தின் ஒரு குறுகிய பதிப்பு தற்போது காட்சிப்படுத்தப்படுகின்றது.

ஐக்கிய இராச்சியத்திலும் வெளிநாடுகளிலும் கணனிமய கூட்டுமுயற்சிப் புதிய வழிகளை உருவாக்கும் கலாச்சாரக் கூட்டுகளுக்கு ஆதரவளிக்கும் பிரிட்டிஷ் கௌன்சில் கணனிக் கூட்டுமுயற்சி நிதியத்தின் உதவியுடன் இந்த அனிமேற்றட் ஆவணம் முன்னெடுக்கப்பட்டது. இதற்கான ஆய்வு மற்றும் உருவாக்கத்திற்கு உதவி வழங்கியவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் Forensic Architecture.

எமது ஸ்தாபக புரவலர்களுக்கென தேர்ந்தெடுக்கப்பட்டு ஒழுங்கமைக்கப்படும் கலை சுற்றுப்பயணங்கள் தொடர்கின்றன. ஏப்ரல் 16-20 வரை ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு MMCA இலங்கை ஒரு சுற்றுப்பயணத்தை ஏற்பாடு செய்தது. இதன் போது, பிராந்தியத்தின் முக்கிய பியனாலே மற்றும் கலை கண்காட்சி ஒன்றைப் பார்வையிட பங்கேற்பாளர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது. இதன் போது, ஆர்ட் டுபாய், அல்சேர்கல் அறக்கட்டளை, குகன்ஹய்ம் அபு டாபி, லூவ் அபு டாபி, ஷார்ஜா கலை அறக்கட்டளை மற்றும் ஜமீல் கலை நிலையம் ஆகிய அமைப்புகளுடன் கூட்டங்களும் சுற்றுப்பயணங்களும் நிகழ்ந்தன.